NP – 091

**IV Semester B.Com. Examination, August/September 2023**
**(NEP Scheme)**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – IV)**

Time : 2½ Hours                                                                 Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(4×1=4)**

1) 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று பாடியவர்
   1) நாமக்கல் கவிஞர்    2) வ. உ. சிதம்பரனார்
   3) பாரதியார்    4) பாரதிதாசன்

2) மு. மேத்தாவின் முதல் கவிதைத் தொகுப்பு
   1) ஆகாயத்துக்கு அடுத்த வீடு    2) ஊர்வலம்
   3) வானம்பாடி    4) கண்ணீர்ப் பூக்கள்

3) பாண்டவர்கள்
   1) நூற்றுவர்    2) எழுவர்
   3) ஐவர்    4) இருவர்

4) பிற அணிகளுக்குத் தாயாக விளங்குவது
   1) உருவக அணி    2) உவமை அணி
   3) வேற்றுமை அணி    4) உயர்வு நவிற்சி அணி

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×4=16)**

1) பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்

2) விற்பனையில் விளையாட்டில் வீட்டில் நாட்டில்
   விலையாகும் கற்புநிலை மறந்து நிற்பான்

3) புது பொழிவினைத் தரவே
   பூமி விரைந்திடு தாயே !

P.T.O.

4) கூட்டாளி வர்க்கங்கள் குணமாற வேண்டும்
குற்றேவல் தொழில் என்ற மனம்மாற வேண்டும்

5) 'நிஜந்தாண்டா சுழி ! அந்த வெள்ளத்துல யாரால
குதிச்சிருக்க முடியும் ? உனக்கு அசாத்திய தைரியமடா' !

6) முகத்தில் புன்னகை, ஆனந்தம். தனக்குப் பேச்சே வராது
என்ற நினைப்பே இன்றி இவன் பக்கத்தில் வந்து,
ராமசாமியைப் பார்த்துக் கைகுவித்து வணக்கம்
தெரிவித்தாள்

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×6=24)**

1) 'வேலைகளல்ல கேள்விகளே!' – என்னும் கவிதை இளைஞர்களுக்கு உணர்த்தும் செய்திகள் யாவை ?
2) மரத்தின் உபயங்களாக கவிஞர் வைரமுத்து கூறுவனவற்றைத் தொகுத்து வரைக.
3) தொண்டனின் பண்புகளை நாமக்கல் கவிஞரின் வழி நின்று புலப்படுத்துக.
4) வீமன் செய்த சபதம் குறித்து எழுதுக.
5) 'தொலைந்து போனவர்கள்' என்ற நாவலின் தலைப்புப் பொருத்தம் குறித்து எழுதுக.
6) சங்கரின் பாத்திரப்படைப்பை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×4=16)**

1) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
2) அசையின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
3) தளை என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறுக.
4) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5) எதுகைத் தொடை, மோனைத் தொடை – இவற்றைச் சான்றுடன் எழுதுக.
6) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் புலப்படுத்துக.

---